செ.வெ.எண்:-60/2020 நாள்:23.04.2020

திண்டுக்கல் மாவட்டம்

# திண்டுக்கல் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டு, கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் இதுவரை 55 நபர்கள் நலம் பெற்று வீடு திரும்பியுள்ளனர் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

மத்திய, மாநில அரசுகள் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை தடுக்க போர்க்கால அடிப்படையில் தீவிர தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. பொதுமக்களின் நன்மை கருதி, நோய் தொற்றை தடுக்கும் பொருட்டும், சமூக விலகலை உறுதி செய்யவும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் உத்தரவின்படி குற்றவியல் நடைமுறை சட்டம் 144-ன் கீழ் திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் ஊரடங்கு உத்தரவு 14.04.2020-ம் தேதி வரை விதிக்கப்பட்டு தற்போது மீண்டும் 03.05.2020-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் 23.04.2020-ம் தேதி வரை கோவிட்-19 நோய்த் தொற்று பாதிப்பு உள்ளதாக 77 நபர்களுக்கு பரிசோதனை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. நோய் தொற்று உறுதி செய்யப்பட்ட 77 நபர்களும் கரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட 77 நபர்களில் திண்டுக்கல் பேகம்பூர் பகுதியைச் சேர்ந்த திரு.மதர் பாபா என்ற 95 வயதான முதியவர் சிசிச்சை பலனின்றி 14.04.2020 அன்று இறந்தார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு, கரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் ஏற்கனவே 44 நபர்கள் மருத்துவ சிகிச்சையில் நலம் பெற்று வீடு திரும்பி உள்ளனர். இதனைத் தொடர்ந்து, **இன்று(23.04.2020) 11 நபர்கள்** மருத்துவ சிகிச்சையில் நலம் பெற்று வீடு திரும்பி உள்ளனர். இதுவரை **திண்டுக்கல்லை சேர்ந்த 55 நபர்கள்** மருத்துவ சிகிச்சையில் நலம் பெற்று வீடு திரும்பி உள்ளனர். தற்போது 21 நபர்கள் கரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் கொரோனா நோய் தொற்று பாதிப்பு உறுதி செய்யப்பட்ட நபர்கள் வசித்த பகுதிகள் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள் (Containment Zone) என அறிவிக்கப்பட்டு அங்கு வசிக்கும் குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டு சுகாதாரத்துறை குழுக்கள் மூலம் தீவிரமாக தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**

---